# வலயக்கல்வி அலுவலகம் - துணுக்காய்

# முதலாம் தவணைப் பரீட்சை - 2020

**பாடம்:- குடியியல்**

சுட்டெண்:...................... **தரம் - 06** **நேரம் : 02 மணி**

**01. எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**01 தொடக்கம் 05 வரையான வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக**

01. மாணவர்களை சிறந்த பண்புள்ள ஒழுக்கமுடைய நற்பிரசையாக மாற்றுவது
    1) கோயில் 2) நூல்நிலையம் 3) பாடசாலை 4) விளையாட்டுமைதானம்

02. பாடசாலையின் வரலாற்றை அறிய உதவும் மூலாதாரமாக அமைவது
    1) பத்திரிகை 2) பாடப்பதிவுப் புத்தகம் 3) பாடசாலைக் கீதம் 4) சம்பத்திரட்டுப்புத்தகம்

03. பாடசாலை ஒழுங்கமைப்பினுள் இடம்பெறும் குழு ஒன்று
    1) பொலீஸ்குழு 2) சாரணர் குழு 3) பாதுகாப்புக்குழு 4) இசைக்குழு

04. உங்களிடம் காணப்படும் நற்பண்புகளில் ஒன்றாக அமைவது எது?
    1) பொறுமை 2) கருணை 3) நேர்மை 4) மேற்கூறிய யாவும் சரி

05. உங்களிடம் காணப்படும் பலவீனங்களில் ஒன்றாக அமையாதது?
    1) கோபப்படுதல் 2) சுயநலம் 3) பொய்பேசுதல் 4) உண்மைபேசுதல்

**வினா 6 தொடக்கம் 10 வரையானவற்றுக்கு சரியாயின் (✔) எனவும் பிழையாயின் (✕) எனவும் அடையாளமிடுக.**

06. திட்டமிடுவதாலும் ஒழுங்கமைப்பதாலும் நோக்கங்களை இலகுவாக அடைந்து கொள்ளலாம் ( )

07. பாடசாலையை முறையாக நிருவகிப்பதற்கு சட்டதிட்டங்கள் அவசியமன்று ( )

08. பாடசாலைக் கீதத்தால் மாணவர்களுக்கு பாடசாலை பற்றிய அபிமானம் ஏற்படும் ( )

09. தனது இலட்சியத்தை அடைந்து கொள்வதற்காக தன்னம்பிகை அவசியமானது ( )

10. பாடசாலையின் ஒழுங்கமைப்பில் மாணவர்களும் உள்ளடங்குவர் ( )

**11- 15 வரையான வினாக்களுக்கு 'அ' பகுதிக்குப் பொருத்தமான விடையை 'ஆ' பிரிவிலிருந்து தெரிவு செய்து அடைப்புக்குள் இடுக.**

| | அ | ஆ |
|---|---|---|
| 11. | கோபப்படுதல் | (A) மாணவர் சேர்வு இடாப்பு |
| 12. | பாடசாலை வரலாற்றை அறிதல் | (B) C.W.W. கன்னங்கர |
| 13. | இலவசக்கல்வியின் தந்தை | (C) பலவீனம் |
| 14. | சேனக பிபிலே | (D) பிறப்புச் சான்றிதழ் |
| 15. | தன்னைப் பற்றி அறிய உதவுவது | (E) அரச ஒசுசல நிலையம் |

**16.- 20 வரையான வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிவு செய்து இடைவெளிகளை நிரப்புக.**

(மாணவர் சேர்வு இடாப்பு, அரச மருந்தகசாலை, ஒழுக்கம் பேணல், தன்னம்பிக்கை, பிள்ளைநேயப் பாடசாலை)

16. பேராசிரியர் சேனக பிபிலேயினால் ................................... அறிமுகப்படுத்தப்பட்டது.
17. ........................... மாணவர்களிடம் அத்தியாவசியமாகக் காணப்பட வேண்டிய ஒன்று
18. உங்களது சேர்வு இலக்கத்தை ...................................... மூலம் அறியலாம்.
19. ...................................... மூலம் பிள்ளைகளின் அத்தியாவசிய உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன.
20. எதிர்மறை எண்ணங்கள் மூலமாக ................................. குறைவடையும்.

(20X02= 40 புள்ளிகள்)

**பகுதி - II**

**முதலாம் வினா உட்பட மேலும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.**
**(மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக)**

**1)**

01. உங்கள் பாடசாலையில் முதலாம் தவணையில் நீங்கள் செய்த கணிப்பீடு என்ன அதன் தலைப்பைத் தருக
02. கணிப்பீட்டை நீங்கள் செய்வதற்காகப் பயன்படுத்திய தரஉள்ளீட்டுப் பொருள்கள் மூன்று தருக?
03. இச்செயற்பாட்டினால் ஏற்பட்ட நன்மைகள் மூன்று தருக.
04. இச்செயற்பாட்டைச் செய்த பின்னர் ஆசிரியரால் வழங்கப்பட்ட ஆலோசனைகள் எவை?

(3+3+3+3=12 புள்ளிகள்)

**2)**

01. உங்கள் பாடசாலையின் மகுட வாசகத்தை எழுதுக?
02. உங்கள் பாடசாலையின் வரலாற்றை அறிய உதவும் மூலாதாரங்கள் மூன்று தருக?
03. சுயவிபரக் கோவையில் காணக்கூடிய விடயங்கள் நான்கு தருக?
04. பின்வரும் பாடசாலை ஒழுங்கமைப்பு மாதிரியைப் பூரணப்படுத்துக?

மாணவர்கள்

1. ..................................

↑

மாணவர் தலைவன் /தலைவி

↑

2. ....................................

↑

பிரதி அதிபர்

↑

3. ........................................ 4. ................................ பாடசாலை அபிவிருத்திக்குழு

(3+3+3+3=12 புள்ளிகள்)

**03)**

01. பாடசாலை ஆசிரியரின் கடமைகள் மூன்று தருக?
02. பாடசாலை ஒழுங்கமைப்பினுள் இடம் பெறும் குழுக்கள் 3 தருக?
03. உங்களிடம் காணப்படும் சிறந்த நற்பண்புகள் 4 தருக?
04. பாடசாலையோடு தொடர்புபடும் மனித குழுக்கள் 3 தருக?

(3+3+3+3=12 புள்ளிகள்)

**04)**

01. உங்கள் பாடசாலையில் வருடாந்தம் நடைபெறும் விழாக்கள் மூன்று எழுதுக?

02. பாடசாலை ஒன்றுக்கு சட்டதிட்டங்கள் அவசியமானதற்கான காரணங்கள் இரண்டு எழுதுக?

03. மாணவர்கள் தொடர்பாகப் பாடசாலையில் காணப்படும் பொதுவான சட்டதிட்டங்கள் மூன்று தருக?

04. திட்டமிட்டுச் செயற்படுவதால் மாணவர் அடையும் நன்மைகள் மூன்று தருக?

(3+3+3+3=12 புள்ளிகள்)

**05)**

01. பாடசாலைத் தனித்துவத்தை அடையாளப்படுத்தும் இலட்சினைகள் மூன்று தருக?

02. பாடசாலைக் கீதம் பாடும் சந்தர்ப்பங்கள் 03 தருக?

03. பாடசாலைக்கீதத்தைப் பாடும் போது கடைப்பிடிக்க வேண்டிய விடயங்கள் 3தருக?

04. பாடசாலை இலச்சினை பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் 3 தருக?

(3+3+3+3=12 புள்ளிகள்)

**06)**

01. பாடசாலை மாணவர் என்ற வகையில் மாணவரின் உரிமைகள் 03 தருக?

02. பாடசாலை மாணவர்களுக்கு அரசாங்கத்தினால் வழுங்கப்படும் வசதி வாய்ப்புக்கள் 3 தருக.

03. பாடாசாலை மாணவர் என்ற வகையில் உங்களால் பாடசாலைக்கு நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள் 3 தருக?

04. ஆசிரியர்களால் மாணவர்களிற்கு நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள் 3 தருக

(3+3+3+3=12 புள்ளிகள்)